**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். DVC 14 /2023**
**வழக்கு சாட்சி. ம.சா.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | நிதர்சனா | **வயது** | : | 29 /2026 |
| **கணவர் பெயர்** | : | மயில்வாகணம் | **தாலுகா** | : | அறந்தாங்கி |
| **கிராமம்** | : | சிலட்டூர் | **தொழில்** | : | |

**Solemnly affirmed by Tmt.Sahanathirushya, Grade-III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873.**

**As per Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identiy of the witness verified with their identity card.**
**Aathar card of the Witness verified.**

**<u>தேதி : 23.01.2026</u>**

**ம.சா.1 குறுக்கு விசாரணை தொடர்சி:**

1. நான் கர்பமாக இருக்கும் காலத்தில் எனது கணவர் தான் என்னை கவனித்துக்கொண்டார் என்றால், சரியல்ல எனது வீட்டார் தான் கவனித்துக்கொண்டனர். நான் வழக்குக்காக பொய் சொல்கிறேன் என்றும், குழந்தை பிறந்தவுடன் குழந்தையை நன்றாக பார்த்துக்கொள்ள சொல்லி எனது கணவர் வெளிநாட்டிற்கு சென்றுவிட்டார் என்று சொன்னால், சரியல்ல அவ்வாறு இல்லை. நான் குழந்தைக்கு நான்கு மாதம் மட்டும் தாய் பால் கொடுத்தேன் என்றும், எனது அழகு பாதித்துவிடும் என்று தாய்பால் தர மறுத்துவிட்டேன் என்று சொன்னால், சரியல்ல என்னிடம் குழந்தையையே தர மாட்டார்கள். மாமியாரும், நாத்தனாரும் குழந்தையை வைத்துக்கொண்டு இருப்பார்கள்.

2. நான் தாய்பால் கொடுக்காததால் குழந்தைக்கு நோய் எதிர்ப்பு சக்தி இல்லாததால் எனது மாமியாரும், எனது நாத்தனாரும் குழந்தையை வைத்திருந்தனர் என்று சொன்னால், சரியல்ல, அவர்கள் என்னை வேலை பார்க்க சொல்லிவிட்டு குழந்தைக்கு பாட்டில் பால் கொடுப்பார்கள். 2 ஆம் எதிர்மனுதாரர் மின்னல் கொடி எனது மாமியார் குழந்தைக்கு பசும்பால் வாங்கிக்கொடுத்தார்கள் என்று சொன்னால், சரியல்ல. எனது குழந்தையை நான் அரவணைக்காமல் வீட்டில் உள்ள நிலக்கதவில் இடித்து கையில் சுடு வைத்து காயங்களை ஏற்படுத்தினேன் என்று சொன்னால், சரியல்ல. எனக்கு சீர்–ஆக கொடுக்கப்பட்ட மெத்தையை அயர்ன் பாக்ஸ் வைத்து பொசுக்கி எதிர்மனுதாரர் மீது பொய் பழிச்சாட்டு வைத்தேன் என்று சொன்னால், தவறு, சரியல்ல.

3. இந்த விஷயம் கேள்விப்பட்டு 1 ஆம் எதிர்மனுதாரர் வெளிநாட்டில் இருந்து மேற்படி சம்பவம் குறித்து கேட்ட போது நான் வாட்ஸ்அப்–இல் இனிமேல் இதுபோல் நடந்துகொள்ளமாட்டேன் என்று மேசேஜ் அனுப்பினேன் என்று சொன்னால், தவறு என்னிடம் போனை கொடுக்கமாட்டார்கள். நான் குழந்தையை எதிர்மனுதாரர்களிடம் விட்டுவிட்டு ஒருமுறை கூட பார்க்கமல் இருந்தேன் என்று சொன்னால், சரியல்ல. நான் குழந்தையை பார்க்க சென்ற போது விரட்டிவிட்டனர். மூன்று வருடமாக நான்

குழந்தையை பார்க்கவில்லை என்றும், எதிர்மனுதாரர்கள் தான் குழந்தையை பார்த்துக்கொண்டனர் என்றும், 1 ஆம் எதிர்மனுதாரர் வெளிநாட்டில் இருந்து வந்த பின்பு நான் குழந்தையை பார்க்க வந்தேன் என்று சொன்னால், தவறு, சரியல்ல.

4. எதிர்மனுதாரர்கள் என்னை மனதளவிலும், உடல் அளவிலும் கொடுமை படுத்தினார்கள் என்று சொன்னால், சரியல்ல, தகாத வார்த்தையால் திட்டி துன்புறுத்தினர். எனது மகனை எனது கணவர் விவேகானந்தா பள்ளியில் படிக்க வைத்தார் என்று சொன்னால், சரியல்ல. நான்தான் படிக்க வைத்தேன். தற்சமயம் எனது மகன் எந்த பள்ளியில் படிக்கிறார் என்றால், அரசு பள்ளியில் படித்து வருகிறார். நான் எதிர்மனுதாரர்கள் 15 பவுன் நகை கேட்டதாகவும், சீர்வரிசைகள் கேட்டதாகவும் கூறுவது பொய் என்றால், சரியல்ல. நான் தான் எதிர்மனுதாரர்களை கொடுமை படுத்தினேன் என்றும், திருமணமாகாத நாத்தனார் மீது வீண் பழி சுமத்துகிறேன் என்று சொன்னால், சரியல்ல. எதிர்மனுதாரர்கள் மீது நான் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**ஒம்/-எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**குற்றவியல் நடுவர் நீதிபதி,**
**அறந்தாங்கி.**